1981 செப்டம்பர் 1]

தாயனூர் பள்ளத்தில் பாலம் கட்டும் திட்டம்

*வினா எண் 151—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) மேட்டுப்பாளையம், காரமடை-பில்லூர் டேம் செல்லும் ரோட்டில் குறுக்கே தாயனூர் பள்ளத்தில் பாலம் கட்டும் திட்டம் உள்ளதா ?

(ஆ) எவ்வளவு மதிப்பீட்டில் எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ரூபாய் 9.71 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டும் பணியினை எடுத்து செய்யப்பட உள்ளது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்டத் தொகை புதிய மதிப்பீட்டிலே ஒதுக்கப்படவில்லை பழைய மதிப்பீட்டிலே ஒதுக்கப்பட்டுள்ளதாக சொன்னார்கள். ஏறி வருகிற விலைவாசியைக் கருதி புதிய மதிப்பீட்டில் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டுகளுக்குள்ளாகவே இந்தப் பால வேலை முடிக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. புதிய மதிப்பீட்டின்படி எவ்வளவு செலவானாலும் இந்தப் பணி முடிக்கப்படும்.

உப்பாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்

*வினா எண் 152—திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை காளியாபுரத்தில் உள்ள உப்பாற்றில் பாலம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) வேலை எப்போது துவங்கும் ?